**<u>In the Court of the  District Munsif, Eraniel</u>**

**Original Suit No. of  83/2018**

Deposition of the PW2 witness for

Name : வெனான்சிஸ் பெலார்மின்

Father's Name :

District :

Taluk :

Village :

Calling :

Religion :

Age :

Date :22.07.2025

Solemnly affirmed by Thiru/Tmt. Assistant, District Munsif Court, Eraniel in accordance with the Provision of Act XLIV of 1893.

**<u>முதல் விசாரணை</u>**

நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன். நான் அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக பணியாற்றி வருகிறேன். இந்த வழக்கில் உள்ள வாதியை எனக்குதெரியுமா என்றால் எனக்கு தெரியும். பள்ளவிளையை சார்ந்த கார்லோஸ் மகன் அந்தோணி முத்து எனக்குதெரியுமா என்றால் தெரியும். 2003 ல் கார்லோஸ் மகன் அந்தோணி முத்து விற்கு நான் ரூ. 25,000 கடனாக கொடுத்தேன். அதற்கு ஈடாக அந்தோணி முத்து 2003 ம் வருடம் கடன் அடமான பத்திரம் எழுதி கொடுத்தார். அதை அவரிடம்

பலமுறை கேட்டும் தராததால் நான் வாதிக்கு 2007 ம் வருடம் அந்தோணி முத்துவின் சம்மதத்துடன் பத்திர பதிவு செய்து கொடுத்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

**1.** அந்தோணி முத்து எனக்கு எழுதி கொடுத்த அடமான பத்திரம் தட்டச்சு செய்யப்பட்டதா , கையால் எழுதப்பட்டதா என்றால் கையால் எழுதப்பட்டது. அது முத்திரை தாளில் எழுதப்பட்டதா அல்லது வெறும் தாளில் எழுதப்பட்டதா என்றால் முத்திரை தாளில் எழுதப்பட்டது. என்னிடம் காட்டப்படும் வாசாஆ. 1 ஆவணத்தில் தமிழ்நாடு அரசால் குறிப்பிடப்படும் முத்திரை வரிசை எண் குறிப்பிடப்படவில்லையென்றால் சரியல்ல, குறிப்பிட்டுள்ளது. அதில் என்ன வரிசை எண் குறிப்பிட்டுள்ளது என்றால் 1694 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி வரிசை எண் பத்திர விற்பனையாளரின் விற்பனை வரிசை எண் என்றாலும் தமிழ்நாடு அரசு வழங்கிய முத்திரை எண் இல்லையென்றாலும் சரியல்ல.

**2.** வாசாஆ. 1 ஆவணம் போலியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் அந்தோணி முத்துவிற்கு நான் கொடுத்த கடனை திருப்பி பெற அறிவிப்பு ஏதேனும் அனுப்பினேனா என்றால் அனுப்பவில்லை. 25.06.2007 அன்று அந்தோணி முத்து இறந்து விட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாசாஆ. 1 ஆவணம் எப்போது எழுதப்பட்டது என்றால் 2007 ம் வருடம் எழுதப்பட்டது தேதி நினைவில்லை. 06.11.2007 தேதியில் எழுதப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. வாசாஆ. 2 ஆவணம் அந்தோணி முத்து இறந்த பிறகு எழுதப்பட்டது என்றால் சரியல்ல.

**3.** எனவே இறந்த நபரின் அனுமதியோடு ஆவணம் எழுதி கொடுத்ததாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அந்தோணி முத்துவிற்கு எந்த பணமும் கடன் கொடுக்கவில்லையென்றாலும் அந்தோணி முத்து எனக்கு எந்த பணமும் கொடுக்க வேண்டியதில்லையென்றாலும் , அவ்வாறு இருந்தால் அந்தோணி முத்து உயிரோடிருக்கும் போதே நான் அறிவிப்பு அனுப்பி கேட்டிருப்பேன் என்றாலும் , நான் பதிவு செய்ததாக குறிப்பிடும் ஆவணம் ஆள்மாறாட்டம் செய்து உற்பத்தி

செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. நான் வாசாஆ. 1 ஆக தாக்கல் செய்துள்ள ஆவணத்தின் சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண் 450/8 என்றும் , உண்மையில் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண் 459/8 என்றும் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான்.

**4.** நான் போலியான ஆவணம் தயாரித்து அந்தோணி முத்துவின் சொத்தை அபகரிக்கும் கெட்ட எண்ணத்தோடு நான் வாதி பெயருக்கு வாசாஆ. 2 ஆவணம் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் தரப்பினரில்லையென்றால் சரிதான். எனக்கு எப்போது சாட்சியமளிக்க அழைப்பாணை வந்தது என்றால் 2 வாரத்திற்கு முன்பு வந்தது. இன்று இந்த வழக்கு நீதிமன்றத்தில் வாய்தா போடப்பட்ட விவரம் யார் கூற தெரியும் என்றால் வாதி வழக்கறிஞர் கூற தெரியும்.

**5.** இந்த வழக்கானது வாதியும் நானும் கூட்டாக அந்தோணி முத்துவின் சொத்தை அபகரிக்கும் எண்ணத்தோடு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. அந்தோணி முத்து இறந்த விவரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால்சமீபத்தில் தெரிய வந்தது. 2018 ம் வருடம் தாக்கல் செய்த இந்த வழக்கில் அந்தோணி முத்து தரப்பினரில்லையென்றால் சரிதான். அந்தோணி முத்து இறந்த விவரம் இறந்த நாளன்றே தெரியும் என்றாலும் அதை தெரிந்து கொண்டே அவர் உயிருடன் இருக்கும் காலத்தில் கடன் தொகையை திரும்ப கேட்காமல் இறந்த பின்பு வாதிக்கு வாசாஆ. 2 ஆவணம் எழுதி கொடுத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**6.** எனக்கு அந்தோணி முத்து உண்மையில் கடன் கொடுக்க வேண்டியிருந்திருந்தால் அவர் இறந்த பின் அவரது வாரிசிடம் வசூல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

( ஒப்பம் )

மாவட்ட உரிமையியல் நீதிபதி

இரணியல்